
திசை எட்டும்
31 கன்னட மொழி இலக்கியச் சிறப்பிதழ் - 2

[illegible]

# திசை எட்டும்

மொழியாக்கக் காலாண்டிதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்

இதழ்–31

ஜூலை–செப்டம்பர் 2011

கன்னட மொழி

இலக்கியச் சிறப்பிதழ்–2

சிறப்பாசிரியர்–பாவண்ணன்

ஆசிரியர்–வெளியிடுபவர்: குறிஞ்சிவேலன்

**ஒரு மொழிபெயர்ப்பாளர் தனது மொழிபெயர்ப்புப் பணியை மேலும் மெருகூட்டுவதற்காக மூலநூலைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம் என்றொரு கருத்து நிலவுகிறது. உங்கள் அணுகுமுறை என்ன?**

மொழிபெயர்ப்பை இரண்டு வகையாகக் கொள்ளலாம். ஒரு மொழியின் இலக்கியத்தைப் பிறமொழியினர் படித்துச் சுவைப்பதற்காக மொழிபெயர்ப்பது ஒருவகை.

அம்மொழி பேசும் மக்களின் பழக்கவழக்கங்களைப் பண்பாட்டை, வரலாற்றுப் பின்புலத்தை ஆராய்பவர்கட்குப் பயன்படும் வகையில் மொழிபெயர்ப்பது மற்றொரு வகை. முதல் வகையில் சுவையே முதன்மையானது. மூலப்பாடலின் அல்லது நூலின் தனித்தன்மையைக் காட்டும் சில பகுதிகள் மொழிபெயர்ப்பில் சுவை தருவனவாக இரா (not interesting) என்று தெரிந்தால் அவற்றை விட்டுவிடலாம். ஆனால் மூலப் படைப்புடன் எதையும் கூட்டுதல் கூடாது. கூட்டினால் அது மொழிபெயர்ப்பு ஆகாது தழுவல் தன்மை பெற்றுவிடும். ஆனால், ஆய்வு செய்பவர்கட்குப் பயன்பட வேண்டுமென்றால் எதையும் கூட்டவும் குறைக்கவும் கூடாது. எவ்வளவு துல்லியமாகவும் தெளிவாகவும் முடியுமோ அவ்வளவு தெளிவாகவும் துல்லியமாகவும் பெயர்த்தல் வேண்டும். சுவையில்லாவிட்டாலும் கவலையில்லை.

— ம. லெ. தங்கப்பா

தலைமைப் புரவலர்: டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார்

இதழ் முகவரி: 6, பிள்ளையார் கோயில் தெரு,
மீனாட்சிப்பேட்டை, குறிஞ்சிப்பாடி–607 302
ஆசிரியர் தொடர்பு: பேசி: 04142–258 314/ 258 012 செல்: 94430 43583
E-mail : thisaiettum@yahoo.co.in

# படைப்புகள்



கட்டுரைகள்:

தூங்கை விழுங்கிய கோழி–பாவண்ணன் 5

மொழியாக்கமெனும் படைப்புக் கலை
– க. பஞ்சாங்கம் 101



புதுமைப்பெண் சரஸ்வதிபாய் இராஜவாடே
கே.வி. சுப்பண்ணா– தாஸ் 123



கவிதைகள்:

எவ்வளவுதான் சிரிப்பது இறைவா? –குவெம்பு 51

விளையாடிய நாங்கள் –ஜி. எஸ். சிவ ருத்ரப்பா 51

யார் இவர்கள்? –சுமதீந்திர நாடிக 52



அது போனாலொரு நொடி... –பிரதிபா நந்தகுமார் 53

நாங்கள் –சித்தலிங்கய்யா 54
(கவிதைகள் மொழியாக்கம்: இறையடியான்)

கன்னட ஹைகூ கவிதைகள்– சி. ரவீந்திரநாத் 85
(மொழியாக்கம்: பட்டு. எம். பூபதி)



கதைகள்:

அபரவின் நிதர்சனங்கள்–எம்.எஸ். ஸ்ரீராம்
(மொழியாக்கம்: தாஸ) 27



கண்ணாடி – பிரேம சேகர
(மொழியாக்கம்: இறையடியான்) 55

விகாசம் – சுந்தர ராமசாமி 87



நூல்நயம்:

காதல் காவியமான தேவதாஸ் –நிலாமகள் 152

கடிதங்கள் 154


80
Nalli